Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12







பழைய பாடல்கள்
புதிய இசையில்..

காப்பார் உன்னை காப்பார்..
தொல்லை கஷ்டங்கள்..
ஆதாரம் நீர்தானய்யா..
சோர்ந்து போகாதே..
பாடுவேன் பரவசமாகுவேன்..



+ 91 - 44 - 22353500
+ 91 - 9940667881

www.kennedyministries.org
E-mail: nijakennedy@yahoo.com




Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# எக்காளம்

VOL . 6 ISSUE . 1
தனிப்பிரதி ரூ 20/= ஆகஸ்ட் 2012





# சமாதானம்

– நிஜா கென்னடி

நம்முடைய தேவன் சமாதான காரணர். சமாதானத்தின் தேவன் அவர். அவருடைய நாமம் **சமாதானப் பிரபு** (ஏசாயா 9:6). எகோவா ஷாலோம் (சமாதானமாகிய கர்த்தர்).

இந்த உலகத்தில் ஒவ்வொரு மனுஷனுக்கும் தேவை சமாதானம். நாம் சந்தோஷத்தோடும் சமாதானத்தோடும் வாழவே நம் தேவன் விரும்புகிறார். **மன மகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும்; மனோதுக்கத்தினாலே ஆவி முறிந்துபோம்** (நீதிமொழிகள் 15:13). நமது மனது துக்கப்பட்டுக்கொண்டேயிருந்தால், நமது இருதயம் சோர்ந்து போகும். எதையுமே நம்மால் செய்ய முடியாது.

நம் வாழ்க்கையில் நடக்கும் பல சம்பவங்கள் நம் மனதை அழுத்திக் கொண்டேயிருந்து, நம் சமாதானத்தை எடுத்து போடுகிறது. ஒருவருக்கொருவர் வாக்குவாதம் பண்ணும்போது, சமாதானம் போய் விடுகிறது. கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் வரும்போதும், கணவனோ, மனைவியோ கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் இருக்கும்போதும், குடும்ப சமாதானம் போய்விடுகிறது. கீழ்ப்படியாத, அடங்காத பிள்ளைகளால் பெற்றோர்கள் சமாதானமில்லாமல் இருக்கிறார்கள். நாம் நினைத்த காரியங்கள் நடக்காதபோது, சமாதானமில்லாமல் இருக்கிறோம். மற்றவர்கள் நம்மை ஏமாற்றும் போதும், சொன்னதைச் செய்யாத போதும் சமாதானம் போய்விடுகிறது. மனிதர்கள் நம்மேல் வீண்பழி சுமத்தும்போதும், புறக்கணித்து ஒதுக்கும்போதும், அவமதிக்கும்போதும், ஏளனமாக பேசும்போதும் சமாதானத்தை இழந்து போகிறோம். சரீரத்தில் உபாதைகள் வரும்போது, பலவிதமான பயங்கள் வந்து சமாதானத்தை இழந்து விடுகிறாம். பலவிதமான இழப்புகள், வீண் செலவுகள் வரும்போது சமாதானம் போய்விடுகிறது. சிலர் மற்றவர்கள்மீது வீணான கோபத்தையும்,



விரோதத்தையும், கசப்பையும், பகையையும் மனதில் வைத்திருப்பதினால் சமாதானமில்லாமல் இருப்பார்கள். அவர்களுடைய சமாதானத்தையே அவர்கள் கெடுத்துவிடுவார்கள்.

நம்மில் அநேகர் எப்பொழுதும் ஏதாவது ஒரு காரியத்தை நினைத்து சமாதானத்தை இழந்து காணப்படுகிறோம். சிலர் தங்கள் வாழ்க்கையில் நடந்த பழைய சம்பவங்களை எண்ணிக் கொண்டேயிருந்து, அவர்கள் சமாதானத்தை காத்துக் கொள்ளாமல், இருக்கிற சமாதானத்தையும் இழந்து போவார்கள். நாம் அப்படியிருக்கக்கூடாது. நம்முடைய சமாதானத்தைக் காத்துக் கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும்.

எந்த போராட்டங்கள், வேதனைகள் வந்தாலும், துர் செய்திகள், குற்றச்சாட்டுகள், வீண்பழிகள் நம்மேல் சுமத்தினாலும் நம்முடைய சமாதானத்தை இழந்துவிடக்கூடாது. சமாதானத்தை கெடுக்கும் காரியங்களைக் குறித்து பேசக்கூடாது. எந்த காரியத்தை பேசினால் சமாதானத்தை இழந்துபோவோமோ அதைக்குறித்து பேசாமல் இருக்க வேண்டும். கடந்த காலத்தில் நடந்த பிரச்சனைகள், நிகழ்ச்சிகளை குறித்தே மறுபடியும் மறுபடியும் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாட வேண்டும் (பிலிப்பியர் 3:13). கடந்த காலத்தில் நடந்தவற்றை மறந்து கர்த்தருக்கு பிரியமானதொரு வாழ்க்கையை வாழவேண்டும்.

தேவனுக்கும் நமக்கும் உள்ள ஐக்கியம் சரியாக இருந்தால், எந்தவிதமான பிரச்சனைகள் வந்தாலும் நம் சமாதானத்தை நாம் இழந்து போகமாட்டோம். தேவனுக்கும், நமக்கும் உள்ள உறவு சரியாக இருப்பதற்கு கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் வளர வேண்டும். தினமும் வேதத்தை படித்து தியானிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

**உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு** (சங்கீதம் 119:165). நாம் எல்லோருமே சமாதானத்தோடுதான் வாழ விரும்புகிறோம். அப்படி சமாதானத்தோடு வாழ வேண்டுமா? கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது என்றால், கர்த்தரை நேசித்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, நாம் சமாதானத்தை பெற்றுக் கொள்ளலாம்.

கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழப்படியாமல், நம் சுயவிருப்பப்படி நடக்கும்போது, போராட்டங்களும், வேதனைகளும், பலவிதமான பிரச்சனைகளும் வந்து நம் சமாதானத்தை கெடுத்துவிடும். கர்த்தரை நேசிப்போம். அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவோம். சமாதானத்தைக் காத்துக் கொள்வோம். அனுதின வாழ்க்கையிலே சமாதானத்தைக் கெடுக்கும் பல காரியங்கள் நேரிட்டாலும் கர்த்தரை நம்பி உறுதியாய் நிற்கும்போது, பிரச்சனைகளுக்கு அப்பாற்பட்டு அவருடைய சமாதானத்தை கொடுத்து சமாதானத்தில் நிலைத்திருக்கச் செய்வார்.

சிலர், மனிதர்கள் அவர்களுக்கு எதிராக கூட்டங்கூடி சதித்திட்டம் பண்ணி காரியங்களை நடப்பிக்கும் போது, சமாதானத்தை இழந்து போவார்கள். பிரியமானவர்களே,

கர்த்தர் உங்களோடுகூட இருக்கும்போது, நீங்கள் கவலைப்படக்கூடாது. அவர்கள் உங்களுக்கு எதிராக பேசும் வார்த்தைகளை கர்த்தர் கேட்டுக் கொண்டிருக்கிறார். உங்களுக்கு எதிராக, மறைவாக செய்யும் காரியங்களையும் கர்த்தர் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார். அதனால் ஒருபோதும் கலங்காதீர்கள். கர்த்தர் அவர்கள் செய்கைக்கேற்ற பலனைக் கொடுப்பார். கர்த்தர் உங்களுக்கு நியாயஞ்செய்வார்.

**ஜாதிகள் தாங்கள் வெட்டின குழியில் தாங்களே விழுந்தார்கள்; அவர்கள் மறைவாய் வைத்த வலையில் அவர்களுடைய காலே அகப்பட்டுக் கொண்டது** (சங்கீதம் 9:15). அதனால் உங்களுக்கு எதிராகவும், மறைவாகவும் யார் என்ன செய்தாலும் கர்த்தர் அவர்களின் கிரியைக்கேற்ற பதில் கொடுப்பார். ஆதலால் சோர்ந்து போகாதீர்கள். வீணாக கவலைப்பட்டு சமாதானத்தை இழந்து போகாதீர்கள். **அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்** (1 பேதுரு 5:7). கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்று அவரிடத்தில் நம் மன பாரங்களைத் தெரியப்படுத்த வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகச் சொல்லுகிறான்: **நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்** (பிலிப்பியர் 4:6,7). கவலை வரும்போது, அதிகமாக ஜெபிக்க வேண்டும். ஜெபம் பண்ணும்போதெல்லாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். அப்பொழுது உலகம் கொடுக்க முடியாத தேவ சமாதானம் இருதயத்தையும், மனதையும் பாதுகாக்கும். **சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்: உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை, உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக** (யோவான் 14:27). இயேசு கிறிஸ்து நமக்கு கொடுக்கும் சமாதானம் உலகம் கொடுக்க முடியாதது.

ஒரு சகோதரி எப்பொழுதும் பல காரியங்களைக் குறித்து வருத்தப்பட்டுக்கொண்டேயிருப்பார்கள். எப்பொழுதும் சமாதானமில்லாமல் கவலையோடு துக்கமுகத்தோடுகூட காணப்படுவார்கள். அந்த சகோதரியின் மகளோ, கர்த்தர்மேல் அதிகமான விசுவாசம் வைத்திருந்தாள். தனது தாய் கலங்கி, வேதனையோடு இருக்கும்போதெல்லாம் ஆறுதலான வேத வார்த்தைகளை எடுத்துக்கூறி, சமாதானப்படுத்துவாள். இயேசு கிறிஸ்து நம்மோடுகூட இருக்கிறார். அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார். நீங்கள் ஏன் சமாதானத்தை இழந்து வேதனைப்படுகிறீர்கள், சந்தோஷமாக இருங்கள் என்று ஆறுதல்படுத்துவாள். அந்த சகோதரி தன் வாழ்க்கையில் நடந்த பல காரியங்களைக் குறித்து தனது



மகளிடம் பகிர்ந்து கொள்ளும்போது, சமாதானத்தை கெடுக்கும் அந்த காரியங்களை உங்கள சிந்தையிலிருந்து எடுத்துப்போட்டு விடுங்கள், அதைக்குறித்து பேசவேண்டாம், வேறு காரியங்களைக் குறித்து பேசலாம் என்று தனது தாயை சமாதானப்படுத்துவாள். நாமும் சமாதானத்தை போக்கும் விஷயங்களைப் பேசக்கூடாது. நம் சமாதானத்தை காத்துக் கொள்ள வேண்டும்.

**நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்** (ஏசாயா 32:17). ஆசா, யூதா தேசத்தின்மேல் நாற்பத்தொரு வருடங்கள் ராஜாவாயிருந்தான். **அவன் இருதயம் கர்த்தரோடு உத்தமமாயிருந்தது** (1 இராஜாக்கள் 15:14). அவன் கர்த்தருடைய வார்த்தையை பின்பற்றி அவருக்கு பிரியமாய் நடந்தான். தன் தேசத்து ஜனங்களை கர்த்தரை தேடவும், அவரைப் பின்பற்றும்படியும் கட்டளையிட்டான். அந்நிய தேவர்களின் பலிபீடங்களையும், மேடைகளையும் அகற்றினான். சிலைகளை உடைத்து, விக்கிரக தோப்புகளை அழித்தான். இவனுடைய நாட்களில் தேசம் பத்து வருஷமட்டும் அமரிக்கையாயிருந்தது (2 நாளாகமம் 14:1). சுற்றியிருக்கும் தேசங்களுடன் யுத்தமில்லாமல் சமாதானம் இருந்தது. அவன் கர்த்தரை தேடினபோது, கர்த்தர் அவனுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார். அவன் செய்த காரியம் வாய்த்தது. இந்த சமாதான காலத்தில், தேசத்தில் பலமிக்க பட்டணங்களைக் கட்டினான்.

நம்முடைய வாழ்க்கையிலும் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களையும் பொல்லாத வழிகளையும் நம்மை விட்டு அகற்றி, மனந்திரும்பி அவருடைய வார்த்தையின்படி நடக்கும்போது, நமக்குள்ளாக, நம் குடும்பத்திற்குள்ளாக மெய்யான சமாதானம் கடந்துவரும். மனிதர்கள் நமக்கு எதிராக பேசினாலும், நம்மை பகைத்தாலும் கர்த்தருடைய சமாதானம் நமக்குள் இருப்பதால் நம்முடைய சமாதானத்தை யாரும் எடுத்துப்போட முடியாது.

ஆசா கர்த்தருடைய பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்தான் (2 நாளாகமம் 14:2). ஆசா கர்த்தருடைய பார்வையில் நல்லதையே செய்தான். நேர்மையாய், நியாயமாய் நடந்து கொண்டான். தேவனுக்கு கீழ்ப்படிதல் சமாதானத்தை கொண்டு வரும், அவன் தேவனுக்கு கீழ்ப்படிந்தபோது, தேசத்திற்கு சமாதானம் வந்தது. நாமும் சமாதானத்தை பெற்றுக்கொள்ள தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவோம். தேவன் வெறுக்கும் காரியங்களையும், பாவ பழக்கவழக்கங்களையும் நம்மை விட்டு அகற்றுவோம். கவர்ந்து இழுக்கும் பாவங்களுக்கு விலகியிருக்கவும், சோதனையை மேற்கொள்ளவும் கர்த்தர் நமக்கு உதவும்படி ஜெபிப்போம். உண்மையுள்ளவர்களாக, நம்பிக்கையுள்ளவர்களாக இருந்து, எப்பொழுதும் அவரையே பின்பற்றி சமாதானத்தோடு வாழ்வோம்.

நம்முடைய வாழ்க்கையில் பாவ பழக்க வழக்கங்களையும், தேவனுக்கு பிரியமில்லாதவற்றையும் நம்மைவிட்டு அகற்றாமல், நல்லது செய்வதினாலும், தொடர்ந்து ஆலயத்திற்கு தவறாது செல்லு

வதினாலும் நாம் சமாதானத்தை பெற்றுக் கொள்ளமுடியாது. பெருங் குழப்பத்தோடுதான் இருப்போம். **நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால், இரட்சிக்கப்படுவீர்கள்: அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனா யிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன்** சொல்லுகிறார் (ஏசாயா 39:15).

**தீமையை விட்டு விலகி, நன்மை செய்; சமாதானத்தைத்தேடி, அதைத் தொடர்ந்துகொள்** (சங்கீதம் 34:14). நாம் தீமை செய்யும்போது, மனசாட்சி நம்மை குத்திக் கொண்டேயிருக்கும். குற்ற மனசாட்சியோடிருப்போம். சமாதானமாக நம்மால் இருக்க முடியாது. ஆதலால் கர்த்தருக்கு பயந்து நாம் வாழவேண்டும். பொய் பேசாமல், பட்சபாதமில்லாமல், ஏமாற்றாமல், பொறாமைப்படாமல், புறங்கூறாமல், நாவினால் முகஸ்துதி பேசாமல், நேர்மையாய், நீதியும் நியாயமாய் இருக்கவேண்டும். சமாதானத்திற்கான வழியை அறிந்து கொண்டு அதன்படி வாழவேண்டும்.

**உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்** (ஏசாயா 26:3). கர்த்தரை அண்டியிருக்கிறவர்களுக்கும், கர்த்தரை நம்புகிற ஜனங்களுக்கும் உண்மையான சமாதானத்தை கர்த்தர் கொடுக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு பாதுகாப்பாய் இருந்து, குறைவின்றி நிறைவாக தொடர்ந்து இருக்கச் செய்வார். கர்த்தருக்கு தங்களை ஒப்புக்கொடுத்து, அவருக்கு கீழ்ப்படிந்து நடந்து, அவரை சார்ந்து உறுதியாய் நம்பியிருக்கிறவர்களின் இருதயத்தில் நிலையான சமாதானம் இருக்கும். கர்த்தர் அவர்களுக்கு நல்ல எண்ணங்களையும், நல்ல மனப்பான்மையையும் கொடுப்பார். கஷ்டங்கள் வந்தாலும்,நல்ல உணர்வுகளோடு சமாதானத்துடன் நடந்து கொள்ள கர்த்தர் உதவி செய்வார். கர்த்தர் நம்மோடுகூட இருக்கும்போது, போராட்டங்கள், மோதல்கள் வந்தாலும், முழுமையான, சமாதானத்துடன் இருக்க முடியும். குழப்பங்களிலிருந்து விடுவித்து காத்துக்கொள்ள முடியும். நம்மை முழுமையாக அவருக்கு அர்ப்பணிக்கும்போது, நம் சிந்தனைகள், எண்ணங்கள் எல்லாம் நிலையாக, சரியாக இருக்கும். சுற்றியிருக்கும் சூழ்நிலைகள், குழப்பங்களைப் பார்த்து கலங்காதபடி, நாம் சோர்ந்துபோய் விடாதபடி, அவரது மாறாத அன்பால், வல்லமையால் நம்மை நிரப்பி, நாம் நிலைகுலைந்து போய்விடாதபடி செய்வார். **மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்** (ரோமர் 8:6). நாம் பாவத்துக்கு கட்டுப் பட்டிருந்தோமானால் மாம்ச சிந்தையை உடையவர்கள். பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுகிறவர்கள், ஆவியின் சிந்தையை உடையவர்கள். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டு அவரால் நடத்தப் படுவோம்.

**இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் வரும் சமாதானம்**

**நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர்**



**நொறுக்கப்பட்டார்: நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்** (ஏசாயா 53:5). உலகிலுள்ள அனைத்து மக்களின் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு துன்பப்படுத்தப்பட்டார். நம்முடைய பாவங்களுக்காக வேதனை, வலியை அனுபவித்து, அதற்கான தண்டனையை ஏற்றுக்கொண்டார். நம்முடைய துக்கங்களை நீக்கி நமக்கு சமாதானத்தை உண்டாக்கினார். **அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கபட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்** (ஏசாயா 53:4). **நாம் பாவங்களுக்குச் செத்து,நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்** (1 பேதுரு 2:24). நம்முடைய பாடுகள், துக்கங்கள், பெலவீனங்கள், நோய்கள் யாவற்றையும் சிலுவையில் சுமந்தார். இதை விசுவாசித்து சரீர சுகத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்வோம். **அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் சமாதானத்தை உண்டாக்கி..** (கொலோசெயர் 1:20). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சமாதானத்தை கொண்டு வரும்.



நமது மனசாட்சி, நாம் செய்த தவறுகளை, பாவங்களை சுட்டிக் காட்டுகிறது. அப்பொழுது, நாம் சமாதானத்தை இழந்து போகிறோம். நாம் பாவங்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கை செய்து மன்னிப்பு கேட்கும்போது, அவர் நாம் செய்த பாவங்களை மன்னித்து, தமது விலையேறப் பெற்ற இரத்தத்தால் நம்மை பாவங்களற கழுவி சுத்திகரிக்கிறார். இது ஆத்துமாவில் (மனதில்) நடக்கும் காரியமல்ல. இது ஆவியில் (இருதயத்தில்) நடக்கும் காரியமாகும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது மனசாட்சியைத்தான் கழுவி சுத்திகரிக்கிறது. நமது துர் மனசாட்சி, நல் மனசாட்சியாகிறது. அப்பொழுது நாம் இந்த உலகம் தரமுடியாத, இந்த உலகத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ள முடியாத, கர்த்தரால் மாத்திரமே தரக்கூடிய

தெய்வீக சமாதானத்தை நம் ஆவியில் (இருதயத்தில்) பெற்றுக் கொள்கிறோம்.



### விசுவாசமும் சமாதானமும்

**துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்** (ஏசாயா 57:21). பாவம் செய்து துன்மார்க்கமாய் வாழும்போது, சமாதானம் இருக்காது. மனசாட்சி அந்த தவறை உணர்த்திக் கொண்டே இருக்கும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படாமல் சுயமாய் நீதியாய் வாழும்போதும், மெய்யான சமாதானம் இருக்காது. நாம் நல்லதை செய்வதினால் நல்லவர்களாக இருக்க முடியாது. மனசாட்சி ஏற்கனவே செய்த தவறுகளை சுட்டிக்காட்டிக் கொண்டேதான் இருக்கும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு வருகிற நல் மனசாட்சியே மெய்யான சமாதானத்தைத் தரும்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் நமது பாவங்களுக்காக தண்டனையைப் பெற்றார். நம்முடைய பாவங்களுக்காக அவர் அடிக்கப்பட்டார், நொறுக்கப்பட்டார். காயங்கள்பட்டார், இரத்தம் சிந்தினார். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை. நம்முடைய பாவங்களை அவர் சுமந்து தீர்த்தார். அதனால் நாம் நீதிமான்களானோம். இதை நாம் விசுவாசிக்கிறோம். இது நாம் செய்த காரியமல்ல. அவர் நமக்கு செய்திருக்கிறார். **விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்** (அப்போஸ்தலர் 15:9). விசுவாசத்தினாலேயே நீதிமான்களானோம். நமது கிரியையினாலல்ல. இந்த விசுவாசத்தின் மூலமாகத்தான் கர்த்தர் நமக்கு அந்த மெய்யான சமாதானத்தை தருகிறார்.

### பரிசுத்த ஆவியானவரும் சமாதானமும்

**தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது** (ரோமர் 14:17). நாம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, பாவ மன்னிப்பை (இரட்சிப்பை) பெற்றுக் கொள்ளும்போது, தேவனுடைய ராஜ்யத்துக்குள்ளாக வந்துவிடுகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரைக் குறித்து சொல்லும்போது, **தேற்றரவாளன்** என்று குறிப்பிடுகிறார். நாம் துக்கத்தால், அவமானத்தால், நிந்தையால் பாதிக்கப்பட்டு சமாதானத்தை இழக்கும்போது, நமக்குள்ளே இருக்கும் பரிசுத்த



ஆவியானவர் நம்மை வேத வசனங்கள் மூலம் ஆற்றித் தேற்றுகிறார். **தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கும்** (ரோமர் 15:4). **ஒரு தாய் தேற்றுவதுபோல தேற்றுவேன் என்று சொல்லுகிறார்** (ஏசாயா 66:13). மனுஷர்கள் எவ்வளவு பேசினாலும், நாம் ஆறுதலடைய முடியாது. அவர்கள் பேசுவதெல்லாம் நமது மனதை மாத்திரமே சென்றடையும். ஒருவேளை மனதளவில் நாம் சமாதானம் அடைந்தாலும் மீண்டுமாக சோர்ந்துபோய் விடுவோம். ஆனால், பரிசுத்த ஆவியானவர் தரும் சமாதானம் நமது இருதயத்திற்குள்ளாக வரும். **எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்** (பிலிப்பியர் 4:6) என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுவது, இந்த உலகத்திலுள்ள எந்த மனுஷனாலும் புரிந்து கொள்ள முடியாதபடி, பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே சமாதானத்தை கொண்டு வருவதையே. இந்த தெய்வீக சமாதானம் எப்படி நமக்குள் வந்தது என்பதை நம்மால் ஆராய்ந்து அறிய முடியாது.

***இந்த தெய்வீக சமாதானம் எப்படி நமக்குள் வந்தது என்பதை நம்மால் ஆராய்ந்து அறிய முடியாது***

நாம் சோர்ந்து போகும் நேரமெல்லாம் கர்த்தருடைய சமூகத்திற்குள்ளாக செல்ல வேண்டும். கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் நம்மோடுகூட இடைபடும்படியாக ஜெபிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமது சிந்தையிலும், இருதயத்திலும் தம்முடைய பிரசன்னத்தை அளவில்லாமல் தரும்படியாக நாம் ஜெபிக்க வேண்டும். அப்பொழுது தேற்றரவாளன் நம்மை ஆற்றி, தேற்றி, திடப்படுத்தி, ஸ்திரப்படுத்துவார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், சமாதானமும் உங்களோடுகூட இருப்பதாக! ஆமென்.

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா



# கர்த்தருடைய வழியில் வாழ்வது

**- ஏஞ்சலின் தீப்தி**

தேவனுடைய ராஜ்யம் என்பது வாழ்க்கைக்கான வழியாகும். பரலோக விதிமுறைகள் நம் வாழ்க்கையில் செயல்பட நாம் அனுமதிக்கும் வழி இதுவே. பழைய ஏற்பாட்டு கால கட்டத்தில், தேவனுடைய ராஜ்யம், இஸ்ரவேலருக்குமாத்திரமே ஒதுக்கப்பட்டு இருந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேவைகளுக்கும், யுத்தங்களை அவர்களுக்காக நடத்துவதற்கும், தேவனையே சார்ந்திருந்தார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து இரட்சிப்பை கொடுப்பதற்காக பூமிக்கு வந்தபோது,அவரது ராஜ்யத்திற்கான வழியை அவரது நாமத்தை விசுவாசித்த எல்லோருக்கும் கொடுத்தார்.

**யோவான் ஸ்நானகன் காலமுதல் இதுவரைக்கும் பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்** (மத்தேயு 11:12). இரட்சிப்பிற்கான சுவிசேஷம் யோவான் காலம் முதல் பிரசங்கிக்கப்பட ஆரம்பித்தது. விசுவாசித்த எல்லோருக்கும் தேவனுடைய ராஜ்யத்தின் வாசல்கள் திறக்கப்பட்டன. இயேசுவின் கால கட்டத்தில், அநேகர் இதன் வெளிச்சத்தைக் கண்டும், தங்கள் வழியில் சென்றார்கள். ஆனால், தெரிந்தெடுக்கப்பட்ட சிலர் அக்கரையோடு தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொண்டார்கள். அதைத்தான் சங்கீதக்காரன் இப்படியாகச் சொல்லுகிறான்: **கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்..**

ராஜாவின் விருந்துக்கு எல்லோரும் அழைக்கப்பட்டதுபோல, எல்லோரும் நுழைய வாசல்கள் திறந்திருக்கின்றன (மத்தேயு 22). அழைக்கப்பட்டவர்களோ, உலகத்தின் காரியங்களில் ஈடுபட்டிருந்ததால் அழைப்பை மறுத்துவிட்டார்கள். ஆனால், அழைக்கப்படாத தெரிந்தெடுக்கப்பட்ட சிலரோ ஒன்று சேர்க்கப்பட்டு சாலையோரங்களிலிருந்து இராஜ விருந்தில் கலந்து கொண்டார்கள். வெறுமனே சும்மா இருந்து ஒருவரும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியாது. உங்களது தரப்பில் நீங்கள் செய்ய வேண்டிய காரியமுண்டு. தேவனுக்கு நாம் செய்ய தேவைப்படும்பொழுதெல்லாம் உலக வேலைகளை ஒதுக்கி வைக்க வேண்டும். இல்லையென்றால், அதைத் தொடர்ந்து வரும் மகிமையை நாம் தவற விட்டு விடுவோம்.

தேவனுடைய ராஜ்யத்தின் நியதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்த வாழ்க்கை நல்லதொரு உதாரணமாகும். பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்குத் திரும்பும் வழியில், இயேசு பசியாயிருக்கிறார். ஒரு அத்தி மரத்தை நெருங்கிச் செல்லுகிறார். ஆனால், அதில் அத்திப்பழங்கள் எதுவும் இல்லை, சீஷர்கள் கேட்கும்படியாக இப்படி சொல்லுகிறார்: **''இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கடவன்''**. உடனே எதுவும் நடக்கவில்லை. ஆனால் அடுத்த நாள் அந்த அத்தி மரம் வேரோடு பட்டுப்போயிருப்பதைக் காண்கிறார்கள். நாமும் அவரைப்போல செயலாற்ற விரும்புகிறார்.

மாற்கு 11:23-ல் இயேசு சொல்கிறார்: **எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.** தேவனுடைய ராஜ்யத்தின் நியதிகளில் பிரதானமானது, தேவன், அவரது வார்த்தையை அவரது நாமத்திற்கும் மேலாக வைத்திருக்கிறார்.நாமும் அவரைப்போல உண்டாக்கப்பட்டிருக்கிறபடியால், நமது வார்த்தைகளும் உருவாக்கும் மற்றும் அழிக்கும் சக்தி கொண்டவையாகும். விசுவாசத்தோடு நாம் சொல்வது நடக்கும்.

மாற்கு 4:26-34 பகுதி, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து இரண்டு உதாரணங்களைக் கொடுக்கிறது. விதையை விதைக்கும்பொழுது, அது வளர்ந்து சிறிது சிறிதாக துளிர்விடும்போது, அதின் மாற்றங்கள் வெளிப்படையாகத் தெரியாது. ஆனால், மெதுவாக, நிச்சயமாக அதின் தண்டு வரும்.பின்பு அதன் உச்சியும், உட்புறமும் வரும். வெகு சீக்கிரத்தில் அதின் அறுவடை வந்துவிடும். காரியங்கள் மெதுவாக இருக்கலாம். ஆனால், அது நிச்சயமாக நடக்கும்.

அதேபோல கடுகு விதையும், இருப்பதிலேயே சிறியதாக இருந்தாலும், பெரிய மரமாக வளரும். எனவே தேவனுடைய ராஜ்யத்தில் முதலீடு செய்வது குறிப்பிடும்படியாக முக்கியத்துவமாக இல்லையென்றாலும், அது பெரிய அளவில் விளைவைத் தரும். இயேசு சொல்லுகிறார், அவரது ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல. மேலும், தேவனுடைய ராஜ்யம் நம் கண்களினால்

காணமுடியாத ஆவிக்குரிய உலகமாக இருப்பதால், அது இரட்சிக்கப்படாத மனிதனுக்கு பைத்தியமாகத் தோன்றும். ஆனால், பரியாசக்காரர்களும், இகழ்பவர்களும், அவரது ஜனங்கள் சந்தோஷத்துடன் அறுப்பதைப் பார்ப்பார்கள். இது ஏனென்றால், இயற்கைக்கு அப்பாற்பட்ட உலகத்தில் நாம் எதை முதலீடு செய்தோமோ, அது தயவாகவும், ஆசீர்வாதங்களாகவும் நமது உலக வாழ்வில் நிரம்பி வழிய ஆரம்பிக்கிறது. மேலே உள்ள இரண்டு உதாரணங்களும், தேவனுடைய ராஜ்யத்தில் விதைக்க விசுவாசியை ஊக்கப்படுத்துகிறது. அதின் எல்லாக் காரியங்களும் வெளியரங்கமாகத் தெரியாவிடினும், அதற்குள் நுழைந்துவிட்டவர்களுக்கு அது தோல்வியைத் தருவதில்லை.

**மேலும், பரலோக ராஜ்யம் நல்ல முத்துகளைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது** (மத்தேயு 13:45). தேவனுடைய ராஜ்யத்திற்காக, நாம் எதையெல்லாம் பெரிதாக நினைத்தோமோ அதையெல்லாம் விட்டுவிட வேண்டும். தேவனுடைய ராஜ்யத்தில் நுழைவதற்கு தேவைப்படுவது நாம் எதைப் பிடித்திருக்கிறோமோ அதை விட்டால்தான், அவரைப் பிடிப்பதை கற்றுக் கொள்ளமுடியும்.

***ஏன் அநேக ஜனங்கள் தேவன் விருந்துக்கு / ராஜ்யத்திற்கு அழைப்பதை உணராமல் இருக்கிறார்கள்?***

**அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; மற்றவர்களுக்கோ அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கத்தக்கதாக, அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகிறது** (லூக்கா 8:10). அநேக சமயங்களில் வேதம் சொல்கிறது, தேவனுடைய ராஜ்யம் என்பது வெறும் பார்வைக்கு தெரியும் காரியம் அல்ல. அது மறைந்துள்ள பொக்கிஷம்போல. அதை பெரிதும் வேண்டி தேடுபவர்களே கண்டடைவார்கள். ஆவிக்குரிய கண்களையுடைய மிகவும் சிலரே உயர்ந்த வாழ்க்கைக்கான வழியை கண்டு, அதை உணர்ந்து பாராட்டுவார்கள். ஏனைய உலகம் குருடாகவே இருக்கும். அழிந்து போகிறவர்களுக்கு தேவனுடைய ராஜ்யம் என்பது பைத்தியமாகத்தான் இருக்கும்.

இயேசு ''என் சரீரத்தைப் புசியுங்கள், என் இரத்தத்தைப் பானம் பண்ணுங்கள்'' என்று சொன்னபோது, அவருடைய சீஷர்களில் அநேகர் அதை புரிந்து கொள்ள முடியாமல், அவரை பின்பற்றுவதை விட்டுவிட்டார்கள்.





அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்தாரிடம் சொல்கிறார்: **கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே** (அப்போஸ்தலர் 17:27). தெய்வீகமான, பரிசுத்தமான தகுதியை உணர்வது என்பது அவரை உண்மையாய் தேடுபவர்களுக்கேக் கிடைக்கும். நாம் அவரை அடையத் தொடங்கும்போது, அவரை வெளிப்படுத்த விருப்பமுள்ளவராய் இருக்கிறார்.

தேவனுடைய ராஜ்யம் அதின் முழுமையை அடைவது எப்போதென்றால், அவரது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, ''வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்'' (மத்தேயு 25:34) என்று சொல்லும்போது.

**ஞானமானது வெளியே நின்று கூப்பிடுகிறது, வீதிகளில் சத்தமிடுகிறது. அது சந்தடியுள்ள தெருக்களின் சந்திலும், ஒலிமுக வாசலிலும் நின்று கூப்பிட்டு, பட்டணத்தில் தன் வார்த்தைகளை வசனித்துச் சொல்லுகிறது** (நீதிமொழிகள் 1:20,21).

இயேசுவின் ராஜ்யத்திற்கு அழைப்பு அதில் நுழைய விரும்பும் எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. ஞானத்தின் சத்தத்தை உணர்பவர்களே, அவரது வாசல்களுக்குள் நுழைவதன் மூலம் ஞானமான முடிவை எடுப்பார்கள். ஆமென்!




இந்திய பெந்தேகொஸ்தே சபையின் (அயனாவரம், சென்னை-23) 3 நாள் (ஜுலை 20, 21, 22) **நம்பிக்கை பெருவிழா** கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்து தந்தார். 3 நாட்களும் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள அடியேனுக்கு கர்த்தர் அருள்புரிந்தார். கர்த்தர் தம்முடைய வார்த்தையினால் அவருடைய பிள்ளைகளை ஆசீர்வதித்தார். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக. போதகர். ஜான் ஐசக் அவர்களையும், சபையினரையும் மற்றும் கலந்து கொண்டவர்கள் அனைவரையும் கர்த்தர்தாமே ஆசீர்வதிப்பாராக!

– கிறிஸ்துவுக்குள்

சகோ. பால்ராஜ் கென்னடி



# கர்த்தருடைய சத்தத்தைக் கேட்க தடையாக இருப்பவை

– க்ரப்லோ டாலர்

உங்களது தரிசனத்தை நீங்கள் அறிந்து கொள்ள கண்டிப்பாக நீங்கள் ஆண்டவரது சத்தத்தைக் கேட்க வேண்டும். உங்களது தரிசனத்தை சென்றடைய, கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கமுடியாதபடி தடை செய்யும் காரியங்களை நீங்கள் அப்புறப்படுத்த வேண்டும். நீங்கள் தடைகளை நீக்கிவிட்டால், கர்த்தர் உங்களை வளமையான வாழ்விற்குள்ளாக நடத்திச் செல்வார்.

உண்மையுள்ள ஆடு, அந்நியனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்பட்டு நடக்காது (யோவான் 10:1-5). கர்த்தருடைய சத்தத்தை மட்டுமே கேட்டு நடக்கும். கர்த்தர் உங்கள் மேய்ப்பராக இருப்பாரானால் நீங்கள் ஒன்றிலும் குறைவுபடமாட்டீர்கள் (சங்கீதம் 23:1). கர்த்தர் உங்களோடு தெளிவாக, குறிப்பாக, விவரித்துப் பேசுவார். தெளிவில்லாமல் உணர்த்தமாட்டார். கர்த்தரின் சத்தத்தைக் கேட்பதற்கு நீங்கள் எதிர்பார்க்க வேண்டும், அதின்படி நடக்க வேண்டும். இந்த உலகத்தின் பாவங்களுக்கு உங்களை விலக்கி பாதுகாப்பதற்கு, கர்த்தரின் சத்தத்தை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். கர்த்தர் தினமும் உங்களோடு பேசிக்கொண்டுதான் இருக்கிறார். கேட்கும் உங்களில் தடைகள் இருந்தால், அவர் உங்களை செய்யச் சொல்லும் காரியங்களை நீங்கள் கேட்க முடியாது.

அவிசுவாசிகள், நீங்கள் கர்த்தரது சத்தத்தைக் கேட்பதற்குத் தடையாக இருப்பார்கள். உங்களை இருமனத்திற்கும், சந்தேகத்திற்கும் நடத்திவிடுவார்கள் (ரோமர் 4:20). அவிசுவாசமுள்ளவர்கள், உங்களை கர்த்தரைவிட்டு, விலகச் செய்வார்கள். அவரது வாக்குத் தத்தங்களை விட்டு அப்புறப்படுத்திவிடுவார்கள் (எபிரெயர் 3:12,19). நீங்கள் கர்த்தர் சொல்லுவதை விசுவாசிக்காவிட்டால், அவரது வார்த்தை உங்களுக்கு ஒன்றும் செய்யாது. அவரது வாக்குத்தத்தங்கள் உங்கள் வாழ்க்கையில் வந்து பலிப்பதை நீங்கள் காணாதபோதும், நீங்கள் எதிர்பார்த்தபடி நடக்காதபோதும், நீங்கள் கர்த்



தரை முழுமையாக நம்புவராக இருக்க வேண்டும்.

கர்த்தர் உங்களை ஆவியின் மூலமாகவே வழிநடத்துவார். உங்களது ஆவியைவிட உணர்ச்சிகளில் அதிகமாக வளர்ந்துவிடாதிருங்கள். உணர்ச்சிகள் உங்களை ஆட்கொள்ளக் கூடாது, வழிநடத்திவிடக்கூடாது. உங்களது ஆவியில் நீங்கள் வளர வேண்டும். கர்த்தர் நீங்கள் ஆவியில் முழுமையாக இருக்க விரும்புகிறார். அப்பொழுதுதான் உங்களை அவர் வழிநடத்த முடியும் (1 தெசலோனிக்கேயர் 5:23-24). உங்களது ஆவியில் நீங்கள் வளர, வேதத்தைப் படித்து அதின்படி நடக்க ஆரம்பியுங்கள். பரிசுத்த ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் பேசி ஜெபியுங்கள். பாடல்கள் பாடி கர்த்தரை ஆராதியுங்கள். பிறகு கர்த்தருடைய சத்தத்தைக் கவனியுங்கள். கர்த்தர் நம் வாழ்வில் கிரியை செய்வது வார்த்தையின் மூலமே. அதனால் வார்த்தையினால் உங்கள் ஆவியை நிரப்புங்கள். வெற்றிகரமான கிறிஸ்தவனாவதற்கு, கர்த்தரது சத்தத்தை நீங்களே கேட்கிறவர்களாக இருக்க வேண்டும்.

யாரையேனும் மன்னியாமல் இருந்துவிடாதீர்கள். அது மனதில் வேதனையைத் தரும். உங்களது சோகமான காரியங்களை மனதில் ஞாபகத்திற்குக் கொண்டு வராதீர்கள். அது கர்த்தர் பேசுவதை நீங்கள் கேட்கத் தடையாக இருக்கும். கோபம், பொறாமை, கசப்பு, வேதனை இவைகள் பரிசுத்த ஆவியானவரை வேதனைப்படுத்தும். அது கர்த்தரது சத்தத்தைக் கேட்க தடையாக இருக்கும் (எபேசியர் 4:26-27,30-31).

கடினமான மனசாட்சி, கர்த்தரது சத்தத்தைக் கேட்கத் தடையாக இருக்கும். தொடர்ந்து மனசாட்சி சொல்லுவதை புறக்கணித்தீர்களென்றால், மனசாட்சிக்கு உணர்வில்லாதவர்களாகிவிடுவீர்கள். உங்களது மனசாட்சிதான் உங்களது ஆவியின் குரலாகும். கர்த்தர் உங்களது ஆவியின் மூலமாகவே உங்களை நடத்துவார். ஒவ்வொரு தடவையும் தேவனுடைய ஆவியானவருக்குக் கீழ்ப்படியாமல் இருந்தீர்களென்றால், கர்த்தர் உங்களோடு பேசுவதை நீங்கள் கேட்பது, மிக மிக கடினமாகிவிடும்.

நீங்கள் ஜெபத்தை தவிர்க்கும்போது, வேதத்தைப் படிப்பதைத் தவிர்க்கும்போது, கர்த்தருடனான ஐக்கியத்தைத் தவிர்க்கும்போது, அது உங்களது சிந்தனை, செயல்கள், பழக்க வழக்கங்கள், குணாதிசயம் மற்றும் தரிசனம் இவைகளைப் பாதிக்கும். ஏனென்றால், நீங்கள் கர்த்தருக்கும், அவரது வார்த்தைக்கும் ஏற்ற வகையில் இல்லை. உங்களது தரிசனத்தை நீங்கள் சென்றடைய, உங்களது மன நிலையும், நீங்கள் எடுக்கும் முடிவுகளும் கர்த்தருடைய வார்த்தைக்கு ஏற்றவிதத்தில் இருக்க வேண்டும்.